210

உ

சிவமயம்

திருவாவடுதுறை

சுப்பிரமணிய சுவாமிகளாலியற்றிய

# சுப்பிரமணியர் விருத்தம்.



1 - JAN 192


சென்னை திருவொற்றியூர்.


ஸ்ரீராமாநுஜம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பெற்றது.

1923

இதன் விலை) (பை-6.





உ

சிவமயம்.

திருவாவடுதுறை

சுப்பிரமணிய சுவாமிகளாலியற்றிய

# சுப்பிரமணியர் விருத்தம்.



7 - JAN 1924

சென்னை-திருவொற்றியூர்

ஸ்ரீ, ராமாநுஜ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1923

17544

உ

சிவமயம்.

# சுப்பிரமணியர் விருத்தம்

—·✳·—

மாமேவுநவரத்ன கேயூரமணிமகுடமன்னிப்பொலிந்தமுடியும், வச்சிரநுதற்றிலகு வெண்ணீறு மோராறு வதனவிம்பத்தினழகும், பாமேவுபத்தற்கு மடைதிறந் தன்பொழுகு பன்னிரு விழிக்கருணையும், பகரறிய பழமறை பழுத்தொழுகு சிறுநகைப் பவளஞ்சிறந்த வாயும், காமேவுகரகமல பந்தியுஞ்சேவலுங் கனகமயிலுங்கிண்கிணிக், காலுமுந்நூலும்வடி வேலுமென் மேலுமெக் காலந்துலங்க வருவாய், தாமோதரானந்த கோவிந்தவைகுந்த சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளோதந்த பரமகுருவாய்வந்த சரவணபவானந்தனே. 1

கண்கொண்ட பூச்சக்ரவாளகோளத்தையொரு கதிகொண்டெழுந்துசுற்றிக், கனககூடந்தடவியுகசண்டமாருதக் காலொடுசுழன்றுபின்னி விண்கொண்டமேகபடலத்தைச்சினந்துதன் மெய்யன்பனெனவுகந்து,விடவரவின்மகுடமுடி சடசடெனவுதிரநடு மேருவொடுபாய்ந்துகொத்தித், திண்கொண்டவல்லசுரர் நெஞ்சுபறை

சொட்டத்திடுக்கிடவெடுத்துமோதித், திறைகொண்ட
டித்தமரர் சிறைகொண்டணைத்திலகு திறைகொண்ட
மயில்வாகனு, தண்கொண்டநீபமலர் மாலையணிமார்ப
னே சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்தபரம
குருவாய்வந்த சரவணபவானந்தனே. 2

துன்னுகயிபலகிரி மேருகிரிகந்தமலை தோகைமலைக
பிலைமலை வாழ், சோலைமலைமேவியவிராலிமலை மன்னிய
சுவாமிமலையுஞ்சிறந்த, சென்னைமலைவேளூர் கடம்பவ
னமேலைவப திருவருணையின்கோபுரம், திருவாவின்கு
டி பரங்கிரி திருத்தணிகை சிவாசலந் திருவேரகம், இ
ன்னிலமதிக்குந் திருச்செந்தின்முதலான வெண்ணப்ப
டாதகோடி, எத்தலமுநீகருணை வைத்துவிளையாடல்வி
த மெத்தனைச்சொல்லுவேனுன், தன்னைநிகரொவ்வாத
பன்னிருகை வேலவனேசரசகோபாலன்மருகா, சதுர்
மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவானந்த
னே. 3

கதியெங்குமூழ்கித் தலந்தோறுஞ்சுற்றியு நல்லநி
யமங்கள்செய்தும், நானென்றவாணவந் தள்ளினேனெ
ன்றுசில ஞானங்கள்பலபேசியுங், கதிகொண்ட மவுனி
யாயட்டமாசித்தியொடு கற்பந்தனைப்புசித்தும், கண்
ணிமைகண்மூடிச் சிவானந்தமென்றுசெயல் கண்டிருந்

தோமென்னவும், எதிரொருவருக்கொருவர் தற்கித்துமற்கட்டி யிப்படியனந்தகோடி, இதுவல்லவதுவல்ல வேன்றுபோராடுவது மென்னவகையோவறிகிலேன், சதமென்னவுன்னைநா னம்பினேன்நம்பினேன்சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவானந்தனே. 4

நாரதப்பிரமாதியமரர் கின்னரருரகர் நாரணன்முதற்பண்ணவர் நடுக்கம்பொருந்திய விடுக்கண்களைந்திட நடக்குங்குழந்தைவயதில்,சூரபத்மாசுரன் கயமுகன்றுருகன் துன்முகன் பானுகோபன்,துட்டவஞ்சச்ரவுஞ்சாசுரன் சிங்கனெடுசுற்றிடவரக்கரையெல்லாம், கோரசங்காரண தூளிபடலங் கொண்டு கூறுடியுனதுவெற்றிக்,கொடியேறவிந்தரன்மணி முடியேறவானுடுமுடியேறவைத்ததுரையே, தாரணியின்மேவுபரி பூரணவிலாசனே சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவானந்தனே. 5

சீலமிகுதற்பரனை யுன்னித்ததேகத் தியானத்தெழுந்துபொங்கிச், சில்லென்று மெய்மறந்தானந்தமவுனஞ் ஜெனிக்கக்குவிந்து கண்ணீர், ஆவிபொழியக்கருணை யுள்ளங்கனிந்துருக வன்புருகவென்புருகவே, அங்கங்குழைந்துபுள கிக்கநின்றிருகு

175214

வாரப்படி யொன்றறிவனே, காலங்கழித்துண்டு வீணு
க்கலைந்துபல காலப்பிரபஞ்சமுழுக், கடற்குட்படிந்தே
கிடக்கின்றபாசங் கடக்கும்படிக்கருளுவாய், தாலமுழு
துண்டுநிலை கண்டகோதண்டமா சரச கோபாலன்மரு
கா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவண
பவானந்தனே. 6

கல்லாலெறிந்துமுன் னெச்சிலைத்தந்துபின் கண்
ணைப்பறித்துவைத்தும், கருதுவகைசொல்லியுஞ் செய்
யசிறுமைந்தனைக் கறிசமைத்துண்ணவைத்தும் வில்லா
லடித்துமோர் பாயவிற்றன்னுடைய விரதஞ்செலுத்து
வித்தும்,வேலையிற்றாணுடுசுழன்றும்பிரானுக்கு மெய்
யென்பனென்நடந்தும், நல்லாரெனப்பேறு பெற்றார்க
ளதுபண்டைநான்செய்தபூஜையீச னன்கிருபையாமெ
னக்குன்கிருபையல்லாது நாடுவதுவேறுமுளதோ, சல்
லாபவுல்லாச வில்லேறுவல்லாளசரசகோபாலன்மருகா
சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவா
னந்தனே, 7

அற்புதமிகப்புகழ் திருப்புகழ்விருப்பொடு சொல்
லருணகிரிதனை யுகந்தாய், அம்புவிபிலின்ப முறுகும்ப

முனிமுன்புவர வன்புருகுமன்புரைத்தாய். உற்பனவ
ரக்கனொடு சர்ப்பனமனப்பய முயற்றநற்கீரனொருநாள்
உன்சலிகை தஞ்சமென நெஞ்சுருகவஞ்சகிரவுஞ்சநேர்
கிரிபிளந்தாய், எப்படியுமுற்படும் வினைப்பயனிலப்பும
தை யிப்புவியிலேமறுப்பா, யீதுகலிகாலமென்றெண்ண
வொண்ணுதநானேழையடியேனுகையால், தற்பரதயா
பர மநோரதர்மகிழ்ந்துதவு சரசகோபாலன்மருகா, ச
துர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவான
ந்தனே. 8

தீராதமாயச் சுகந்தந்தவிக்கவுஞ் சென்னஞ்செழி
த்தபின்பு, செகதலமயக்கமதிலேயென்குடித்தலந் தியம
ருளோர்வங்கணம்,போராடுசெஞ் சாரபாசபந்தம் மிதிற்
போகமடவாரிணக்கம், பொறிவாயலைக்குமீதுள்ளபடி
முன்வினைப்போகந்தொடர்ந்தநெறியால், ஆராலுமுடி
வரா தானுவிதற்குநல்லறிவென்றதீபமொன்றுண் டவ்
வழியிலே மனஞ்செல்லாமலலைகின்ற வடியேனையாட்
கொள்ளுவாய், தாரேருபன்னிரு புயாசலக்கடவுளே
சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்தபரமகுரு
வாய்வந்த சரவணபவானந்தனே 9

தருகாமமோகமுறு திமிதிமிங்கிலமிக்க தனமோடு மணமுதலையாம், தற்கோபவனல்மடவை மூடத்துவம் பாசி சஞ்சலமெனும்தரங்கம் அரிபவெல்லொருருமிழி யஞ்ஞானவாரிதிபி லலைகின்றசீவராசி, யத்தனையுமீ னென்னநீவிசுவலைவிழ்வரவ்வுயிரில் யானுமொருவன், கருதரியபாரப் பெருங்கடல் கடந்தேர வேணுமென் றால், கைத்தவலையில்லை யினி யென்செய்குவேனுனது காற்றவணைகைப்பற்றினேன், சரியமர்செய்நெடியபடை சூரகஜசிங்கமே சரசகோபாலன்மருகா, சதுர்மறைகா சோதந்தபரமகுருவாய்வந்த சரவணபவானந்தனே. 10

தூயபொறியைந்தை யுமடக்கிப்புலாதிகள் சுழல் கின்றவழிமறித்துச்; சுழிமுனைதிறந்துமூலாதாரமேலா ந்துவாதசாந்தத்தைமுட்டி, வாயுவையிறுக்கிப் பிலத்து வருகுண்டலியை வவ்விமேற்கொண்டெடுத்து, வாசி யைநடத்தியவ் வோசையைத்தாவென்று வழிகொண் டுநாதவெளியில், தோயும்பரப்பிர்ம்மபூரணவிலாசமது சோதிப்பதென்னவெளிதோ, தொலையாத நிலையாத தகையாலுன்பதந்துணையே துணைப்பற்றினேன், தாய கமஞ்சுகரமயூரவாகனமுருகா சரசகோபாலன்மருகா

சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்தசரவணபவானந்தனே.

கண்ணேறுவாராது பிணியொன்றுசேராது வசூலைப்படாதுநெஞ்சங், கலியாதுசலியாதுநலியாதுமெலியாது கலியென்றபேயடாது,விண்ணேறுமணுகாதுகன்மவினைதொடாது விஷமச்சுரம்வராது, வெய்யபூதம் பில்லி வஞ்சனைகொடாராவிஷம் பரவுசெந்துமடாரா, எண்ணேறுசனனங்கள் கிடையாதுகாலபயமெவ்வளவுமேயிராதிவ், வேழைக்கிரங்கியருடெய்வருனையல்லாம வின்னமொருதெய்வமுண்டோ, தண்ணேறுதங்கமலைமங்கையருடங்கமே சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவானந்தனே.

125214

சுப்பிரமணியர் விருத்தம்.

முற்றிற்று.

—0—

# மதனசேகரன்.

## அல்லது

## மணகோல மாப்பிள்ளை

## பிணக்கோல மானகேஸ்.

இது ஓர் வேடிக்கையான விநோதகதாபூஷணம். எண்ணிரந்தநாவல்கள் இத்தமிழ்நாட்டில் உலாவி வரினும் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிறப்பினையும், கதைத்தொடர்பையும் உடைத்தாயிருக்கிற தென்பது யாவரும் அறிந்த விஷயமாயிருக்கினும் இக்குறைந்த விலையுள்ள இப்புத்தகத்தில் விவரித்திருக்கும் அதிக ஆச்சரியமான சம்பவங்களை வாசித்தவர்கள் இதைப்பற்றி ஆனந்த மடையாமலிருக்க மாட்டார்கள் என்பது துணிபாகும். உலகவிசித்திர காலபேத நடவடிக்கைகளை அனுசரித்தே இது எழுதப்பட்டிருக்கிறது. விடா நகைப்பையும், வேடிக்கையையும் தரக்கூடிய விஷயங்களைச்சேர்த்து சொன்னயம் பொருணயம் முதலிய அலங்காரவர்ணனைகளைப்புகட்டிய மனதைக்கவரத்தக்கவிதயமாய் சேர்க்கப்பட்ட கதாசாரத்தைப் பொருந்திய சிறப்பினையுடையது.

இதன் விலை அணா ௩.

வே. ஜெயவேலு முதலியார்
நெ, 29, ஆரிமுத்து மேஸ்திரி வீதி,
ஆனை போஸ்டு, மதராஸ்.